# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,061 — 1934 ம் ஹு ஆனிமீ 29 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரையைப் பற்றிய சட்டம்.**

1934 ம் ஆண்டு சந்நாஞு காயகியின், ஆடி திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராசரிய மந்திரிசபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தினூற் திருத்தப்பட்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின 1 ம்பிரிவின் பிரகாரம் செய்த பிரமாணங்கள்.

டீ. பீ. ஜயதிலக,
சுயகாரிய மந்திரி.

சுயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ஹு ஜூன்மீ 20 ந் திகதி.

### மேற்குறித்த ஒழுக்க விதிகள்.

1. இந்த விதிகளில் "வாடியின் இடப்பரப்பு என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் ளடங்கிய விசாலத்தைக கருதும்."

"உதவி அரசாட்சி ஏசன்றர்" என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிககுகளின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டககூடாதென்று விலககி வைககப்பட்ட வாடியின் இடப்பரப்புககுள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினுல் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலஞ்சலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய, வாடியின் இடப்பரப்புககுள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும், தண்ணீர்ப்பதார்த்தமான அல்லது கட்டிப்பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (a) அடிக்கப்படும்படி அங்கே கொண்டுவரப்பட்டவைகளும் உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளைப்படி அவ்விடப்பரப்புக்குள் வைத்துககொள்ள இடங் கொடுக்கப்பட்டவைகளுமான ஆடு மாடுகளைத் தவிர வேறு ஆடு மாடுகளை வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவரும் வைத்திருக்கப்படாது.

(b) உதவி அரசாட்சி ஏசன்றரால் ஒரு மாட்டுக்காலையாக விசேஷமாய் நியமிக்கப்பட்ட அல்லது அப்படிப் பாவிக்கலாமென்று உத்தரவு கொடுக்கப்பட்ட ஓர் இடத்திற் தவிர மற்றப்படிக்கு வாடியின் இடப்பரப்பின் சமீபத்தில் ஆடு மாடுகளை வைத்திருக்கப்படாது.

(c) அவ்வாடுமாடுகளைத் தன் பொறுப்பில் வைத்திருப்பவன் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட அதிசமீபத்திலுள்ள இடத்தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடு மாடுகள் நிற்குமிடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புககுள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடுகளும் ஈ இலையான் விழாமலும் தூசி படியாமலும் இருக்கும்படி (a) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும் அல்லது (b) கண்ணுடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும் அல்லது (c) வைத்திய உத்தியோகஸ்தரால் அல்லது வாடிவீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருககும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிககப்பட்ட வேறு எவ்விதமான மூடிப்பெட்டிக்ளுக்குள்ளும் வைத்திருககப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுகத்துக்குக் கேடு வருவிககத்தக்க ஆட்களுக்கும், தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப்புககுட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளைநோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தல யாத்திரைக்காரரை, யாத்திரை ஸ்தலத்தை விட்டுப் போகும்படி செய்தும், அவர்கள் அங்கிருந்து எப் பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிககலாம்.

9. (a) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்துவியாதியுள்ள ஒவ்வொருவனும் அல்லது (b) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவனுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டென அறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்குத்தருக் கல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிகக வேண்டும்.

10. வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தை யல்லது கிணற்றை ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாக வைத்து அதைக்குறித்து ஒரு விளம்பரம் அவ் விடத்தில் வெளியாக வைக்கப்பட்டிருந்தால் அகுளத்தை யல்லது அக்கிணற்றை அது புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துககே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச் சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளா மல் ஒருவராகிலும் பாண்போறனே,சோடாமோள் அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாது. அவ் லைசென்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச் சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளா மல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப் பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றைய தெருக் களின் எல்லைக்குட் செல்லக் கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும்படாது.

13. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதிச் சீட்டு அல்லது லைசென்ஸ் பெறுமல் ஒருவராகி லும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப் பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துககுள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விடவேனும்படாது.

14. உதவி அரசாட்சி ஏசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத திருக்கு மிடங்களில் ஆடு மாடு அடிப்போர் அவ்விடத்தைத் துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இடாப்பு.

தலைவில்லுவாடி இடப்பரப்பின் எல்லைகள்.

வடக்கு: தலைவில்லு ஓடை;

தெற்கு: ஏத்தாலை தலைவில்லும், தேவ்குடா தலைவில் லும் அடிப்பாதைகள் எறும்புக்குடலில் வந்து சேருஞ் சந் தியிலிருந்து நேர்மேற்குப் புறமாகக் கடலுக்குப்போகும் அடிப்பாதை;

கிழக்கு: பண்டாரம் கருக்குவச்சாம் பெரியதோட்டம் வழிகள்:

மேற்கு: கடல்.

---

காணி நிர்ணய முன்னறிவித்தல்களை குறித்த விளம்பரங்கள்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 798 (குருநாக்கல்).

இதனோடணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்தைககேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 29 ௳ தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931ம் ஆண்டின் காணி யுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக் காணியை முடிககுரிய காணியென வெளிப்படுத்தி முடிக் குரிய காணியாக அதன் விஷயத்திற செய்யவேண்டி யன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத் தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவிததல் கொடுக்கப்படு கின்றது.

1934 ம் ௵ (மே) வைகாசிமீ 10 ௳ தேதியிலன்று குருணக்கல் கச்சேரியிற் கொடுககப்பட்டது.

டீ. பி. செனவிரத்ன,
உதவி அரசாட்சி ஏஜன்ரர், குருநாக்கல் டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிக மான விபரம் வடமேல் மாகாணம் அரசாட்சி ஏஜன்ரர் அவர்களிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வே யர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ் வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ் சொல்லப்படுங் காணித்துண்டுகள் வடமேல் மாகா ணத்தில் குருநாக்கல் டிஸ்த்திறிக்கில் வாயுடவில்லி ஹத் பத்துவில் குடாகல்பொட கோறளையில் வவகெதற என்னும் கிராமத்தில் இருக்கின்றன:—

பிரதமபடம் இல. 7,139.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | கல்கிற்றியாவவை .. | .. 0 1 0·7 |
| 2 | ஷை .. | .. 0 0 20·5 |
| | | 0 1 21·2 |

எல்லைகள்: வடக்கே-டி. எம். களுவண்டாவும் மற்றவர்க ளூம் உருத்தாடும் கலகிற்றியாவவத்த; கிழக்கே-குருநாகலி லிருந்து கல்கமுவவுக்குப் போகும் றோட்டும், வன்னியான் உரித்தாடும் கலஹேற்றியாவவை எனப்படும் 7,139 ம் இலக் கப் படத்து 6 ம், காணித்துண்டும்; தெற்கே-அவுசதகாமி யும் மற்றவர்களும் உரித்தாடும் கலகிற்றியவத்த; மேறகே-சுந்தாப்பொல என்னும் கிராமத்தின் எல்லை.

---

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 799 (குருணக்கல்).

இதனோடணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதறகேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 29 ௳ தேதியிலிருந்து மூன்றுமாச காலத்திற்குள், இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒரு வரும் அறிவியாதிருககுமிடத்து 1931 ம் ஆண்டின் காணி யுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக் காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக் குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின் றது.

1934 ம் ௵ (மே) வைகாசிமீ 10 ௳ தேதியிலன்று குருணக்கல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டீ. பி. செனவிரத்ன,
உதவி அரசாட்சி ஏஜன்ரர், குருணக்கல் டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பறறிய இன்னும் மேலதிக மான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏசன்றர் அவர்க ளிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வககாணிகளுக்குள்ள உரிததாமென்பதை அறிந்து கொள்க.

அட்டவணை.

கீழ்ச் சொல்லப்படுங் காணித்துண்டுகள் வடமேல் மாகா ணத்தில் குருணக்கல் டிஸ்திறிக்கில் தம்பதேனி ஹற்பத்து வில் றெக்கோப்பத்துக் கோறளையில கலபொடகம என் னுங் கிராமத்திலிருக்கின்றன :—

I.—பிரதமபடத்து இல. 6,854.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | பொல்கஸ்கங்கொடகுடக்கந்த | .. 0 1 5 |
| 2 | ஷை .. | .. 0 0 32 |
| | | 0 1 37 |

எல்லை: வடக்கு-ஜே. எச். உக்குவண்டாவும் மறுபேரும் உரித்தாடும் சியம்பலகும்புறபில்லாவவும். 5,015 ம் இலக் கப் பிரதமபடத்தில் பொல்கஸ்கங்கொடகெலே வென்று சொல்லப்படும் முடி உரித்தாடும் 1 ம் இலக்கத் துண்டும்; கிழக்கு-5,015 ம் இலக்கப் பிரதமபடத்தில் பொல்கஸ்கங் கொடகெலே வென்று சொல்லப்படும் முடி உரித்தாடும் 1 ம் இலக்கத் துண்டு; தெற்கு-பண்டா இலங்கூனும் மறுபேரும் உரித்தாடும் பொதுக்கும்புற; மேற்கு-ஜே. எச். உக்குபண்டாவும் மறுபேரும் உரித்தாடும் சியம்பலக்கும்புற பில்லாவ.

II.—பிரதமபடத்து இல. 7,738.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 10 | குடக்கந்த .. | .. 4 0 14 |

எல்லை: வடக்கு, கிழக்கு-உகூமிய என்னுங் கிராமஎல்லை; தெற்கு-5,015 ம் இலக்கப் பிரதமபடத்தில் பொல்கஸ்கங் கொடகெலே வென்று சொல்லப்படும் முடி உரித்தாடும் 1 ம் இலக்கத் துண்டு; மேற்கு-ஜொஹானிஸ் பெரேரு அப்புகாமி உரித்தாடும் கெறக்கொவெவவத்த.

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச சட்டம்.

### காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
### நொம்பர் 800 (குருநாக்கல்).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைகசேனும் தமக்கு உரித்தண்டென்று 1934 ம ஆண்டு (ஜூன்) ஆனிமீ 29 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934 ம் ஆண்டு (மே) வைகாசிமீ 11 ந் தேதியிலன்று குருநாககல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டீ. பி. செனவிரத்ன,
உதவி அரசாட்சி ஏஜன்ரர், குருநாக்கல் டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும்மேலதிகமான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ரர் அவர்க அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுககுள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

#### அட்டவணை.

கீழ் சொல்லப்படுங் காணித்துண்டு வடமேன் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் தம்பதெனிஹற்பத்துவில் உடுக்கக கோறளை வடக்கில் கல்லெனகெதற கிராமத்தில் இருக்கின்றது:—

பிரதமபடம் இல. A 24.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 3 | பறுவவ | .. .. | 8 | 3 | 33 |

எல்லை: வடக்கே-கே. எம். டிங்கிரிவண்டா மறுபேரும் உரித்தாடும் கம்பகம்பிற்றியெற்றம்பிலிககமுல்லெ கும்புறெயும், ஆர். பி. முதியன்செயும் மறுபேரும் உரித்தாடும் கம்பகம்பிற்றியெகும்புறவும்; கிழக்கே-எஸ். கறோலிஸ் சில்வாவும் மறுபேரும் உரித்தாடும் இல்மெகும்புறவும், கல்லெனகெதற கிராமததின் எல்லையும்; தெற்கே-புஞ்சிவண்டாவும் மறுபேரும் உரித்தாடும் அலவற்றுபிற்றிய வத்தவும், றணுவத்த கோவில் அதிகாரிகளுக்குரிய, 100,955 ம் இலக்க உறுதிப்படத்தில் காட்டப்பட்ட றணுவத்தவில்உள்ள கோவில் காணியும்; மேற்கே-றணுவத்த கிராமத்தின் எல்லை.

---

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

### காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
### நொம்பர். 801 (குருணுக்கல்).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோககைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஆண்டு (ஜூன்) ஆனிமீ 29 ந் தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிகருரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுககப்படுகின்றது.

1934 ம் ஆண்டு (மே) வைகாசிமீ 11 ந் தேதியிலன்று குருணுக்கல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டி. பி. செனவிறத்ன,
உதவி அரசாட்சி ஏஜன்ரர், குருணுக்கல் டிஸ்திறிக்.

குறிப்பு—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ரர் அவர்களிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமெனபதை அறிந்துகொள்க.

#### அட்டவணை.

கீழ் சொல்லப்படுங் காணித்துண்டுகள் வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் தம்பதேனி ஹறப்பத்துவில உடுககாக கோறளை வடகக்ல் றணவத்த என்னும் கிராமத்திலிருககின்றன :—

பிரதமபடம் 24 A.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 1 | வறுவாவ | .. .. | 1 | 0 | 32 |
| 2 | ஷை | .. .. | 9 | 2 | 24 |
| 4 | வாக்கந்தபாவுலஹேன | .. | 1 | 0 | 17 |
| 5 | ஷை | .. .. | 0 | 0 | 19 |
| | | | 12 | 0 | 12 |

எல்லைகள்: வடக்கே-நாககெதற என்னும் கிராமத்தின் எல்லை; கிழக்கே-கலனகெதற என்னும் கிராமத்தின் எல்லை; தெற்கே-பீ. பீ. சைமன் உரிததாடும் லவகமவத்தையும், பீ. பீ. சைமனும் மற்றவர்களும் உரித்தாடும், வவகமஹேனவும்; மேற்கே-வீ. ஆர். எஸ். பீ. ஏ. வீரப்பா செட்டியாரும், மற்றவர்களும் உரித்தாடும் கனத்திக்கும்புறவும், டீ. டீ. பெருமாவும் மற்றவர்களும் உரித்தாடும் வாவடமுல்லேகும்பறவும் நாககெதற என்னும் கிராமத்தின் எல்லையும்.

---

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

### காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
### நொம்பர். 802 (குருணககல்).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோர்கைக்கேனும் தமக்கு உரித்துணடென்று 1934 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 29 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியில் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயததிற செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934 ம் ௵ (மே) வைகாசிமீ 10 ந் தேதியிலன்று குருணுக்கல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டி. பி. செனவிறத்ன,
உதவி அரசாட்சி ஏஜன்ரர், குருநாக்கல் டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ரர் அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இககாணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

#### அட்டவணை.

கீழ் சொல்லப்படும் காணித்துண்டுகள் வடமேல் மாகாணத்தில் குருணுக்கல் டிஸ்திறிக்கில் தம்பதெனிஹற்பத்துவில் றெக்கொப்பத்து கோறளையில உகுமிய கிராமத்தில் இருக்கின்றன :—

பிரதம படத்து இல. 7,738.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 6 | புதுப்பிற்றியெஸ்கொலவத்த | .. | 3 | 1 | 8 |
| 7 | பொல்கஸ்கொங்கடமூக்கலான | .. | 0 | 0 | 34 |
| 8 | ஷை | .. .. | 30 | 1 | 5 |
| 9 | அஸ்வெத்துமெவன | .. .. | 1 | 1 | 0 |
| | | | 35 | 0 | 7 |

எல்லைகள்: வடக்கே-முடி உரித்தாடும் றத்மலககப்பிற்றிய எனப்படும் 7,738 ம் இலக்கப் பிரதமப்படத்து 1 ம் இலக்கத் துண்டும், முடி உரித்தாடும் றத்மலககப்பிற்றிய எனப்படும் 7,738 ம் இலக்கப் பிரதமபடத்து 2 ம் இலக்கத் துண்டும், இலங்கைத் தேங்காய்க் கொம்பனிக்குரிய 154,259 ம் இலக்க உறுதிப்படத்தில் காட்டப்பட்ட குளோவிஸ் தோட்டமும், முடி உரித்தாடும் குளோவிஸ் தோட்டம் எனப்படும் 7,738 ம் இலக்கப் பிரதமபடத்து 4 ம் இலக்கத் துண்டும், இலங்கைத் தேங்காய்க் கொம்பனிக்குரிய 113,960 ம் இலக்க உறுதிப்படத்தில் காட்டப்பட்ட குளோவிஸ் தோட்டமும், முடி உரித்தாடும் குளோவிஸ் தோட்டம் எனப்படும் 7,738 ம் இலக்கப் பிரதமப்படத்து 5 ம் இலககத் துண்டும்; கிழக்கே-குருநாக்கல்—மாதம்பெ (பீ. டபிள்யு. டீ.) ரோட்டிற்கு மாப்பிற்றியவிலிருந்துபோகும் கன்சபாவ ரோட்டு; தெற்கே-முடி உரித்தாடும் பொல்கஸ்கங்கொடெமூக்கலான எனப்படும் 5,544 ம் இலக்கப் பிரதமபடத்து 2 ம் இலக்கத் துண்டும், முடி உரித்தாடும் பொல்கஸ்கங்கொடெமூகககலான எனப்படும் 5,544 ம் இலக்கப் பிரதமபடத்து 1 ம் இலக்கத் துண்டும், முடி உரித்தாடும் பொல்கஸ்கங்கொடகெலே எனப்படும் 5,015 ம் இலககப் பிரதமபடத்து 2 ம் இலக்கத் துண்டும், கலபொடகம கிராம எல்லையும்; மேற்கே-ஐ. எம். உக்குவண்டா உரித்தாடும் அஸ்வெத்துமெவத்தவும், ஜேம்ஸ் பெரேரு அப்புகாமி உரித்தாடும கல்கந்தெவத்தவும்.

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 803 (குருணாக்கல்).

இதனோடிணைத்திருககும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் வூல (ஜூன்) ஆனிமீ 29 ந தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருககுமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக் காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்த முடிககுரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேறசொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல கொடுக்கப்படுகின்றது.

1934 ம் வூல (மே) வைகாசிமீ 12 ந தேதியிலன்று குருணாக்கல் கச்சேரியில கொடுக்கப்பட்டது.

டீ. பி. செனவிறத்ன,
உதவி அரசாட்சி ஏஜன்ரர், குருணாக்கல் டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ரர் அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ்ச் சொல்லப்படும் காணித்துண்டுகள் வடமேல் மாகாணத்தில், குருணாக்கல் டிஸ்திறிக்கில், கம்றுகம்பொல ஹற்பத்துவில், மெத்தெக்கெற்றிய கோறளையில், நெதுன்பத்தல என்னுங் கிராமத்திலிருக்கின்றன:—

பிரதமபடத்து இல. 7,763.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | கோங்ககமுலவத்த அல்லது பக்மிகக முலவன .. .. | 0 | 0 | 22·9 |
| 2 | ஷை .. .. | 1 | 0 | 6·8 |
| 3 | கோங்ககமுலவன அல்லது பக்மிகக முலவன .. .. | 0 | 1 | 32 |
| | | 1 | 2 | 21·7 |

எல்லை: வடக்கு-7,762 ம் இலக்கப் பிரதமபடத்தில் ஆர். பீ. சேதுவவும் மறுபேரும் உரித்தாடும் போககமுலவன என்று சொல்லப்படும் 2 ம் இலக்கத்துண்டும், எம். பீ. மிற்றிய உரித்தாடும் போககமுலவனவும்; கிழக்கு-எம. பீ. பினவும் மறுவும் உரித்தாடும் கோங்ககமுலவத்தவும், எம். பீ. ஹப்புவும் மறுவும் உரித்தாடும் கோங்ககமுலவத்தவும், எம். பீ. பாலையா உரித்தாடும் கோஙககமுலவனவும்; தெற்கு-எம். பீ. ஹப்புவும் மறுவும் உரிததாடும் கோங்கக முலவத்தவும், கொறஸ்ஸாவிலிருந்து நெல்லு வயல்களுக்குச் செல்லும் ரோட்டும்; மேற்கு-எல். பீ. லெபுன உரித்தாடும் கோங்ககமுலவத்த.

---

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 804 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்தைக்கேனும் தமக்கு உரிததுண்டென்று 1934 ம் வூல (ஜூன்) ஆனிமீ 29 ந தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருககு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக் காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934 ம் வூல (மார்ச்) பங்குனிமீ 21 ந தேதியிலன்று கண்டிக் கச்சேரியிற் கொடுககப்பட்டது.

டி. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏஜன்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெறறுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், உடப்பலாத்தைப் பகுதி, கண்டுக்கார இகல கோறளையிலுள்ள மாவத்துற என்னுங் கிராமத்திலுள்ள பின்வருங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் இல. 8,851.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | வாகுகெபத்தனவத்த (எலாவோடு சேமித்தது) .. | 2 | 2 | 27 |
| 2 | வாகுகெபத்தன ( ஷை ) . | 4 | 3 | 12 |
| 3 | ஷை (ரோட்டோடு சேமித்தது) | 0 | 1 | 18 |
| 5 | வாகுகெபத்தனவத்த அல்லது பொல்ககமுலாத்தெவத்த (கன்சபாவா பாதையோடு சேமித்தது) .. | 0 | 1 | 31 |
| 6 | பான்சால்வத்த .. .. | 0 | 2 | 1 |
| 7 | வாகுகெபத்தன .. .. | 2 | 1 | 7 |
| 8 | ஷை .. .. | 1 | 2 | 9 |
| 9 | ஷை .. .. | 1 | 1 | 38 |
| 10 | ஷை .. .. | 1 | 1 | 20 |
| 11 | ஷை .. .. | 1 | 1 | 32 |
| 12 | ஷை .. .. | 2 | 1 | 1 |
| 13 | — .. .. | 0 | 1 | 20 |
| 14 | கஹுகல்கின்ன .. .. | 0 | 3 | 30 |
| 15 | ஷை .. .. | 1 | 2 | 15 |
| 16 | வாகுகெபத்தன .. .. | 1 | 0 | 30 |
| 17 | ஷை .. .. | 1 | 0 | 11 |
| 18 | கஹுகல்கின்ன .. .. | 1 | 0 | 25 |
| 19 | கஹுகல்கின்னவும் வாகுகெபத்தனவும் (ரோட்டோடு சேமித்தது) .. .. | 4 | 1 | 3 |
| 21 | கஹுகல்கின்ன .. .. | 1 | 1 | 37 |
| 22 | ஷை .. .. | 1 | 0 | 39 |
| 23 | ஷை .. .. | 1 | 0 | 34 |
| 24 | ஷை .. .. | 1 | 1 | 35 |
| 25 | ஷை .. .. | 2 | 0 | 28 |
| 26 | ஷை .. .. | 1 | 3 | 22 |
| 27 | ஷை .. .. | 1 | 2 | 24 |
| 28 | ஷை .. .. | 1 | 3 | 26 |
| 30 | ஷை .. .. | 1 | 1 | 14 |
| 31 | ஷை .. .. | 2 | 0 | 3 |
| 32 | ஷை .. .. | 1 | 3 | 36 |
| 33 | ஷை .. .. | 1 | 2 | 2 |
| 34 | ஷை (ரோட்டோடு சேமித்தது) | 0 | 2 | 31 |
| 35 | ஷை (எலாவோடு சேமித்தது) | 4 | 2 | 15 |
| 36 | கஹுகல்கின்ன .. .. | 1 | 0 | 11 |
| 37 | ஷை .. .. | 2 | 0 | 5 |
| 38 | ஷை .. .. | 1 | 0 | 4 |
| 39 | ஷை .. .. | 1 | 2 | 14 |
| 40 | ஷை .. .. | 1 | 0 | 8 |
| 41 | ஷை .. .. | 0 | 3 | 27 |
| 42 | ஷை (ரோட்டோடு சேமித்தது) | 0 | 0 | 34 |
| 43 | கஹுகல்கின்ன .. .. | 1 | 1 | 10 |
| 44 | ஷை .. .. | 1 | 0 | 6 |
| 45 | ஷை .. .. | 1 | 0 | 15 |
| 46 | ஷை .. .. | 0 | 3 | 29 |
| 47 | ஷை .. .. | 0 | 3 | 25 |
| 48 | ஷை (ரோட்டோடு சேமித்தது) | 0 | 1 | 9 |
| 49 | கஹுகலகின்ன .. .. | 0 | 3 | 39 |
| 50 | ஷை .. .. | 0 | 3 | 33 |
| 51 | ஷை .. .. | 1 | 0 | 1 |
| 52 | ஷை .. .. | 1 | 1 | 39 |
| 53 | ஷை .. .. | 1 | 1 | 38 |
| 54 | கஹுகல்கின்ன .. .. | 1 | 0 | 1 |
| 55 | ஷை .. .. | 1 | 1 | 14 |
| 56 | ஷை .. .. | 1 | 0 | 28 |
| 57 | ஷை .. .. | 0 | 3 | 21 |
| 58 | ஷை (ரோட்டோடு சேமித்தது) | 0 | 0 | 26 |
| 59 | கஹுகல்கின்ன .. .. | 0 | 3 | 17 |
| 60 | ஷை .. .. | 0 | 3 | 30 |
| 61 | ஷை .. .. | 0 | 3 | 27 |
| 62 | ஷை .. .. | 1 | 0 | 32 |
| 63 | ஷை .. .. | 1 | 0 | 36 |
| 65 | ஷை (எலாவோடு சேமித்தது) .. | 2 | 0 | 0 |
| 66 | கஹுகல்கின்ன .. .. | 1 | 0 | 8 |
| 67 | ஷை .. .. | 1 | 0 | 36 |
| 68 | ஷை .. .. | 1 | 0 | 26 |
| 69 | ஷை .. .. | 0 | 2 | 39 |
| 72 | ஷை .. .. | 1 | 0 | 20 |
| 73 | ஷை .. .. | 1 | 0 | 32 |
| 74 | ஷை .. .. | 1 | 2 | 36 |
| 75 | ஷை .. .. | 1 | 0 | 2 |
| 76 | ஷை .. .. | 0 | 3 | 34 |
| 77 | ஷை .. .. | 1 | 3 | 25 |

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 78 | கீனுகல்கின்ன .. | 1 1 31 |
| 79 | ஷை .. | .. 1 0 7 |
| 80 | ஷை .. | .. 1 0 10 |
| 81 | ஷை .. | .. 1 0 18 |
| 82 | ஷை .. | .. 0 3 36 |
| | | 103 3 15 |

எல்லைகள்: வடக்கு-இங்கிலிஷ் ஸ்கொட்டிஷ் ஐக்கிய சங்கத்தால் உரித்தாடப்படும் மகாவெல குறூப் (பி. ப. 8,851/29), உ. ப. 134,548 ல் உரித்தாடப்படும் நிலம், முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட வாருகெபத்தனவெஹுவத்த (பி. ப. 8,851/20), உ. ப. 318,573 ல் உரித்தாடப்படும் நிலம், முடியால் உரித்தாடப்படும் வாருகெபத்தன (பி. ப. 6,251/366), உ. ப. 318,573 ல் உரித்தாடப்படும் நிலம், முடியால் உரித்தாடப்படும் வாருகொஸயகெல்லெபத்தன (பி. ப. 6,251/363), உ. ப. 315,985 ல் உரித்தாடப்படும் நிலம், முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட வாருகெபத்தனவத்த அல்லது பொல்ககமுலெத்தெவத்த (பி. ப. 8 851/4); கிழக்கு-கன்சபாவா றேட், முடியால் உரித்தாடப்படும் படும் பிட்டியாகேன (பி. ப. 6 251/G 28), உ. ப. இல 353,260) 120,979, 120,968, 157,928 ல் உரித்தாடப்படும் நிலம், முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட றிவர் சைட் எஸ்ரேற் (பி. ப. 8,851/64), உ. ப. 112,272 ல் உரித்தாடப்படும் நிலம்; தெற்கு-உ. ப. இல. 112,273, 54,102 ல் உரித்தாடப்படும் நிலம்; மேற்கு-முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட மகாவெல குறூப் (பி. ப. 8,851/83, 71, 70), கன்சபாவா றேட், உ. ப. 54,102 ல் உரித்தாடப்படும் நிலம் கஹுகலகேன திறீக் ஸ்டேசன், உ. ப. 50,249 ல் உரித்தாடப்படும் நிலம்.

---

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல் நி. 805 (சிலாபம்).

இதனுடனிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அல்லது எப்பங்குக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஹூ (ஜூன்) ஆனிமீ 29 ந் தேதியிலிருந்து மூன்று மாசகாலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணிகளை முடிக்குரிய காணியென் வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்தில் செய்யவேண்டியன செய்துமுடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1934 ம் ஹூ (மார்ச்) பங்குனிமீ 9 ந் திகதி, புத்தளம் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. ஈ. கிறிஸ்தோபல்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு,

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் புத்தளம் உதவி அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அலைகளின் படங்கள் அளவைக்கந்தோர்த் தலைவரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக வெலற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென அறிக தகொள்க.

### அட்டவணை.

வடமேன் மாகாணம், சிலாப டிஸ்திறிக்கு, பிட்டிகல் கோறளை தெற்கு, ஓத்தறபலாத்த வடக்கு, கிறிமெட்டியான கிழக்கு என்னும் கிராமத்திலுள்ள பின்வரும் காணித் துண்டுகள்:—

I.—பிரதமபடம் இல. A 92.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | கல்பாறகெலெ .. | .. 11 1 37 |
| 2 | அமுஹெனலர்த .. | .. 1 0 39 |
| 3 | ஷை .. | .. 0 0 15 |
| | | 12 3 11 |

பின்வருமெல்லைகளையுடையன:—வடக்கில்-துலாவெலைக்குப் போகும் டி. ஆர். சி. றேட்டு; கிழக்கில்-157,721 ம் 213,546 ம் இலக்க டயிட்டில பிளான்கள்; தெற்கில்-114,195 ம் இலக்க டயிட்டில் பிளானில் சொல்லப்பட்ட காணியும் கஹடவில்லவுக்குப் போகும் கன்சபாவ றேட்டும்; மேற்கில்-166,227 ம், 166,226 ம் இலக்க டயிட்டில பிளான்களில் சொல்லப்பட்ட காணிகள்

II.—பிரதமபடம் இல. A 92.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 4 | சியம்பலாககவத்தயும் மாறககவத்தயும் .. | .. 0 2 0 |
| 7 | பாறகாவபிமா .. | .. 0 0 18 |
| | | 0 2 18 |

பின்வருமெல்லைகளையுடையன: வடக்கில்-கஹடவில்லாவுக்குப் போகும் கன்சபாவ றேட்டு; கிழக்கில-124,211 ம் இலக்க டயிட்டில் பிளானி[illegible] காணி; தெற்கில்-208,610 ம், 208,60[illegible] ம் இலக்க ட[illegible]ட்டில் பிளான்களில் சொல்லப்பட்ட காணிகள்; மேற்கில்-2[illegible]5[illegible]3 ம், 114,194ம் இலக்க டயிட்டி[illegible] பிளான்களில் சொல்லப்பட்ட காணிகள்.

III.—பிரதமபடம் இல. A 92

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 5 | குறுகொடல்ல .. | .. 16 2 21 |

பின்வருமெல்லைகளையுடையன: வடக்கில்-றேட்டுக்காக விடப்பட்ட காணி (234 ம் இலக்க பிளானில் 9,398 ம் துண்டு); கிழக்கில்-207,430 ம் இலக்க டயிட்டில் பிளானில் சொல்லப்பட்ட காணி; தெற்கில்-து[illegible]ாவெலைக்கு போகும் டி. ஆர். சி. றேட்டு; மேற்கில்-207[illegible]26 ம் இலக்க டயிட்டில் பிளானில் சொல்லப்பட்ட காணி

IV.—பிரதமபடம் இல. A 92.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 6 | மகுளுககாவத்த .. | .. 0 0 7 |

பின்வருமெல்லைகளையுடையன: வடக்கிலும், கிழக்கிலும்-கஹடவில்லாவுக்குப் போகும் கன்சபாவ றேட்டு; தெற்கிலும், தெற்கு மேற்கிலும்-213,545 ம், 124,211 ம் இலக்க டயிட்டில் பிளான்களில் சொல்லப்பட்ட காணிகள்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மலபல்லவில் ஓர் இங்காட்டுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 362. குறிச்சி—மக்கும்புற.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மீககவுத்த .. | தோட்டம், 9 தென்னையும், 20 பலாவும், 3 மாமரமும், 4 கஜு மரமும், 2 கமுகுவுமுள்ளது | எம். பேபிசிங்கோ பெறிரு, எம். ஒதிரிஸ் பெறிரு, எம். பஸ்தியான் பெறிரு, கே. இசோகாமி, ரி. பீரிறிஸ், யே. யுவனிஸ், எல்லோரும், மக்கும்புற | 0 3 8·6 |
| 2 | ஷை .. | தோட்டம், (வெறுங்காணி) .. | ஆர். மிசிகாமி, மக்கும்புற .. | 0 0 3·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1934 ம் ஹூ ஆவணி மாசம் 20 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடைமைகளினது தன்மையையும் அவ்வுடைமைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1934 ம் ஹூ ஆனிமீ 27 ந் உ.

டபிள்யு. எச். மூர்,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கறகண்டுங்கலாவுக்குப் போகும் பழைய கன்சபாவ பாதையை அகலித்தலும் திருத்தலும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 9,235. குறிச்சி—கறகண்டிங்கல (பகுதி), நாவலப்பிட்டி நகரசங்க எல்லைக்குள், கண்டிப்பகுதி, மத்திய மாகாணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | அமுவத்த, வீட்டிலக்கம் 10, 11 (பகுதி) .. | தேயிலை .. | சின்ன லெவ்வை மைமு நாச்சியா, என். பு: லெவ்வையின் மனைவி | 0 0 1·10 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 3·05 |
| 3 | அமுவத்த, வீட்டிலக்கம் 12 (பகுதி) .. | ஷை .. | ஷை .. | 0 0 0·85 |
| 4 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 0·25 |
| 5 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 0·35 |
| 6 | பான்சாலைவத்த, வீட்டிலக்கம் 61 (பகுதி) .. | ஷை .. | எம். எச். லெவ்வை .. | 0 0 3·80 |
| 7 | அத்துவெவத்த, வீட்டிலக்கம் 63 இன் பகுதி .. | தோட்டம் .. | அ. அப்துல் றசாக் .. | 0 0 0·80 |
| 8 | இறுசெவத்த வீட்டிலக்கம், 64 (பகுதி) .. | ஷை .. | டி. எச். லெவ்வை .. | 0 0 1·01 |
| 9 | இறுசெவகத வீட்டிலக்கம், 59 (பகுதி) .. | ஷை .. | எம். எச். லெவ்வை .. | 0 0 0·74 |
| 10 | பிரசமனைவத்த, வீட்டிலக்கம் 53 (பகுதி) .. | ஷை .. | உ. மீரா லெவ்வை .. | 0 0 0·55 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1934 ம் ௵ (ஆகஸ்டு) ஆவணிமாசம் 10 ௳ தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1934 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 23 ௳.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஆண்டியாடெனியேவெவ என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லபடும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. Sup. 1 to F. V P. 256. குறிச்சி—க[illegible]னவெல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 35A | கல்லகெருட்டேவெல .. | நெல்வயல் .. | உடயாலகஹெகல் விகாற பார்வைகாறர் | 2 3 31 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ ஆவணி மாசம் 8 ௳ தேதியிலன்று காலை 9 மணிக்கு றன்ன வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பான்தோட்டைக் கச்சேரி,
1934 ம் ௵ ஆனிமீ 23 ௳.

எவ் லீச்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பலபொத்த தச்சபாடசாலை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. Sup 5 to F V P 339. குறிச்சி—பலபொத.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 46F5 | கலபதியசஹவத்த | 40 வருஷ மரங்கள் 6 தென்னையும் 2 மாவும் 11 வாழைமரங்களும் | பலபொத்தசேர்ந்த டீ. என். றனசிங்கவும் ஆர். பீ. டொன் டியோனிஸ், டீ. ஏ. லெர்றன்ஸ் என்பவரின் உரிமைக்காரர் | 0 0 16·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ ஆவணி மாசம் 8 ௳ தேதியிலன்று காலை 10 மணிக்கு தங்காலை வாடிவீட்டில் என்முன்பாக் வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பான்தோட்டைக் கச்சேரி,
1934 ம் ௵ ஆனிமீ 23 ௳.

எவ். லீச்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

உத்தியோக சம்பந்தமில்லாதவர் அறிவித்தல்.

காலி டிஸ்திறிக்கில் சங்கபடபத்துயில் கொதேவலையில் வசிக்கும் கங்கானம்கமமே தொன் பீட்டர் அபயசிரிவர்தன ஆகிய நான 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 1 B என்னும் செடுலினது 2 ம் செக்சன்படி சிலாப டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்ஆக வேலைபார்ப்பதற்கு இற்றைக்கு மூன்று மாசத்தின்பின் றெஜிஸ்றார் ஜனரல் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

(கையொப்பம்)
கே. டீ. பீ. அபயசிரிவர்த்தன.

1934 ம் ஆண்டு ஆனிமீ 22 ௳.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.